රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය

**பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு**

**MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT**

ඒකාබද්ධ සේවා අංශය **இணைந்தசேவைகள்பிரிவு** **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07,இலங்கை. Independence Square,Colombo 07, Sri Lanka

| දුරකතනය<br>தொலைபேசி:**(94) 011- 2694560**<br>Telephone | ෆැක්ස්<br>தொலைநகல்:**(94) 011- 2692254**<br>Fax | ඊ-මේල්<br>மின்னஞ்சல்:**dgcs@pubad.gov.lk**<br>E-mail | වෙබ් අඩවිය<br>இணைத்தளம்: **www.pubad.gov.lk**<br>Web Site |
|---|---|---|---|


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/DOS/05/03/01 | ඔබේ අංකය<br>உமதுஇல<br>Your No | | දිනය<br>திகதி:<br>Date | 2017.08.22 |

அனைத்து அமைச்சின் செயலாளர்கள்/
திணைக்களத் தலைவர்கள்/
மாவட்டச் செயலாளர்களிற்கு

**<u>வினைத்திறமைகாண்தடைதாண்டல் பரீட்சையிற்கு சலுகை வழங்குதல் - அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை</u>**

மேற்படி விடயம் தொடர்பான எனது சம இலக்கம் மற்றும் 2016.06.10ஆந் திகதிய கடிதம் தொடர்பானது.

02. அக் கடிதத்தில் 3ஆம் பந்தியின் பிரகாரம் வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை சித்தியடைவதற்கான சலுகைக் காலம் பெற்றுக் கொள்வது தொடர்பில் கோரிக்கைகளை EC(EST 07) படிவத்தின்படி எனக்கு அனுப்பி வைக்கும் படி தெரிவித்திருப்பினும் அது தொடர்பாக கிடைக்கும் பெரும் எண்ணிக்கையான கோரிக்கைகளினால் ஏற்பட்டுள்ள செயற்பாட்டு ரீதியான பிரச்சினைகள் காரணமாக ஒவ்வொரு உத்தியோகத்தர் தொடர்பாகவும் குறித்த படிவத்தை பூரணப்படுத்தி அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்பதை தயவுடன் அறியத் தருகிறேன்.

03. அரச சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 03/2016 இன் 4ஆம் பந்தியின் அடிப்படையில் இணைந்த சேவைகளுக்குள் உள்ளடங்கும் உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறமைகாண் தடைதாண்டல் பற்றிய சலுகையிற்கு அனுமதி வழங்குதல் என்னிடம் கையளிக்கப்பட்டு இருப்பதால் குறித்த சுற்றறிக்கையின் 03ஆம் பந்தியின் படி அடுத்தடுத்து வரும் 06 தடவைகளிற்குள் வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையை பூரணப்படுத்தும் உத்தியோகத்தர்களின் நியமனத்தை உறுதிப்படுத்த தேவையான ஆவணங்களை எனக்கு அனுப்பி வைப்பது போதுமானது என்பதோடு அவ் ஆவணங்களை முன்வைத்த பின்னர் குறித்த சலுகைக்காலம் வழங்கப்பட்டு அவ் உத்தியோகத்தர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை நியமனத்தில் உறுதிப்படுத்தல் என் மூலம் மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பில் தங்களுக்கு அறியத்தரப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம்./கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

அபிவிருத்தி உத்தியோகத்தர் தொடர்பான கடிதங்களை அனுப்புகையில் அவர்களது நியமனக் கடித இலக்கத்தை (CS/DOS/XXXXX) குறிப்பிட்டு அனுப்புமாறு தயவுடன் வேண்டுகிறேன்.